| D–5350 |
|---|

| Sub. Code |
|---|
| 31911 |

DISTANCE EDUCATION

M.A. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2022.

First Semester

இக்கால இலக்கியம்

(CBCS 2018–19 Academic Year onwards)

Time : Three Hours Maximum : 75 Marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. பாரதியாரின் 'மாதா மணிவாசகம்' எங்கு வெளியிடப்பட்டது?

2. குடும்பவிளக்கில், பள்ளிக்குச் சென்ற குழந்தையைத் தாய் எவ்வாறு வரவேற்கின்றாள்?

3. ஐக்கூவின் இலக்கணம் யாது?

4. கிணற்றுக்குள்ளிருந்து தூர் எடுக்கப்பட்ட பொருள்கள் யாவை?

5. விடுதியில் தங்கிப் பயிலும் மகளின் அறைத் தோழி எங்கிருந்து வந்தவள்?

6. 'மத்தவிலாசப் பிரகசனம்' என்ற நாடகம் யாரால் எழுதப்பட்டது?

7. வேலைக்காரி நாடகத்தில் இடம்பெறும் தலைமை மாந்தர்கள் யாவர்?

8. கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும் என்ற கதையில் இடம்பெற்ற புராணக்கதை எது?

9. ஜெயகாந்தன் சாகித்திய அகாதமி விருது பெற்ற நூல் எது?

10. தமிழ்தென்றல் என்ற சிறப்புப் பெயர் யாருக்குரியது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

11. (அ) பாரதிதாசன் எடுத்துரைக்கும் பெண்ணின் காலைக் கடமைகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) அப்துல் ரகுமானின் இருபக்கங்கள் கவிதை உணர்த்தும் தத்துவப் பின்னணியைக் கூறுக.

12. (அ) ‘இதயம்’ ஹைக்கூ கவிதை தரும் பல்வேறு கருத்துகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து எழுதுக.

13. (அ) அண்ணாவின் வேலைக்காரி நாடகத் தலைமை மாந்தர் பாத்திரப் பண்புகளைக் கூறுக.

(அல்லது)

(ஆ) ஜெயகாந்தன் சுட்டும் தனிமனிதர்களின் சிறப்புகளை எழுதுக.

14. (அ) நா. முத்துக்குமார் 'தூர்' தரும் கருத்தினை விளக்குக.

(அல்லது)

(ஆ) வெளிநாட்டு வாழ் தந்தையின் பாசத்தினை வைரமுத்துவின் அப்பா சிறுகதை வழி எழுதுக.

15. (அ) 'சிறை' தலைமை மாந்தர் பண்புநலன்களைக் கூறுக.

(அல்லது)

(ஆ) அழகு ததும்பும் இடங்களாக திரு.வி.க. கூறுவனவற்றை எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்றனுக்கு** மட்டும் விடையளிக்க.

16. பாரத மக்களின் நிலை குறித்துப் பாரதியார் தரும் கருத்துகளைத் தொகுத்துரைக்க.

17. உலக நாடகத் தோற்றம் குறித்து விரித்துரைக்க.

18. 'ஒரு தொழிலாளியின் டைரி' சிறுகதை உணர்த்தும் தனிமனித ஏக்கங்களை விளக்குக.

19. கி. ராஜநாராயணின் 'கோபல்ல கிராம' கதைமாந்தர்களின் காரணப் பெயர்கள் குறித்து விளக்கியுரைக்க.

20. வண்ணதாசன் 'அகமும் புறமும்' கட்டுரை தரும் பனையோலை குறித்த செய்திகளைத் தொகுத்துரைக்க.

———————

**D–5351**

**Sub. Code**
**31912**

DISTANCE EDUCATION

M.A. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2022.

First Semester

அற இலக்கியங்களும் சமய இலக்கியங்களும்

(CBCS 2018–19 Academic Year onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளி.

1. நீங்கா நிலனாள்பவற்கு இருக்க வேண்டிய மூன்று பண்புகள் யாவை?

2. ஆற்றுணா வேண்டாதார் யாவர்?

3. அந்தணர் வீட்டில் எவை புகுதல் இன்னாவாகும்?

4. மருதிடங் கொண்ட ஒருதனிக் கடவுள் யார்?

5. சிவபெருமான் மண்ணுலகில் யாரைப் பிறவாமல் காப்பார்?

6. ஈசன் அடியாரை நாளும் கோளும் என்று ஞானசம்பந்தர் பாடிய பதிகம் எது?

7. எத்தகைய பந்தலுக்குக்கீழ் தன்னை மதுசூதனன் கைப்பற்றக் கனவு கண்டதாக ஆண்டாள் பாடுகிறாள்?

8. வட்டி பெறுவார் செல்வம் எதைப்போல் அழியுமெனத் திருமூலர் குறிப்பிடுகிறார்?

9. பரிபூரணானந்தமான இறைவன் யாருக்குத் தேவதருவாக இருக்கிறான் என்று தாயுமானவர் பாடுகின்றார்?

10. எத்தகைய திருக்கூத்தைத் தனக்குக் காட்ட வேண்டுமென்று குணங்குடியார் வேண்டுகின்றார்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளி.

11. (அ) தகையணங்குறுத்தல் அதிகாரத்தில் வள்ளுவர் உணர்த்தும் அகமரபுச் செய்திகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) இறைமாட்சி அதிகாரம் மன்னனின் கடமைகளை எவ்விதம் வலியுறுத்துகின்றது?

12. (அ) ஒவ்வொரு மனிதனும் ஒதுக்க வேண்டிய தீமைகளை இன்னா நாற்பது தெளிவுறுத்துவது எங்ஙனம்?

(அல்லது)

(ஆ) அறிவுடைமை பற்றிப் பழமொழி நானூறு உரைப்பன யாவை?

13. (அ) போற்றித் திருத்தாண்டகத்தில் அப்பர்பெருமான் இறைவனிடம் விண்ணப்பம் செய்யும் பாங்கினை விவரி.

(அல்லது)

(ஆ) திருவேங்கடமுடையானிடம் குலசேகராழ்வார் பிறவி வேண்டி நிற்பதை விளக்குக.

14. (அ) கோளறு பதிகத்தில் திருஞானசம்பந்தர் நாளின் தன்மைகளை எவ்வாறு புலப்படுத்துகின்றார்?

(அல்லது)

(ஆ) "உயர்வு அற உயர்நலம் உடையவன்" என்னும் பாசுரத்தில் நம்மாழ்வார் திருமாலின் அருட்தன்மையை எவ்வாறு பாடுகின்றார்?

15. (அ) பராபரக்கண்ணி உணர்த்தும் தெய்வ வழிபாட்டின் சிறப்பினை விவரி.

(அல்லது)

(ஆ) நம்மாழ்வாரின் 'விடுமின்' எனத் தொடங்கும் திருமொழிப் பாசுரம் உரைப்பனவற்றை எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்று** வினாக்களுக்கு விடையளி.

16. திருக்குறள் கல்வியின் பெருமையையும் கல்லாமையின் இழிவையும் எடுத்துரைக்குமாற்றை விவரி.

17. மானுட வாழ்வில் கடைபிடிக்கத்தக்க நற்செயல்களை இனியவை நாற்பது எவ்விதம் வலியுறுத்துகின்றது? எடுத்துரைக்க.

18. திருவிரட்டை மணிமாலையில் காரைக்காலம்மையார் சிவபிரானிடம் வேண்டுவனவற்றைத் தொகுத்துரைக்க.

19. வள்ளலார் தெய்வமணிமாலையில் முருகப்பெருமானிடம் விண்ணப்பம் செய்வனவற்றைக் கட்டுரைக்க.

20. தேசிய விநாயகம் பிள்ளையின் ஆசிய ஜோதி அறம் உணர்த்தும் பாங்கினை விவரி.

---

| D–5352 |
|---|

| Sub. Code |
|---|
| 31913 |

DISTANCE EDUCATION

M.A. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2022.

First Semester

இலக்கணம் I — தொல்காப்பியம் — எழுத்ததிகாரம் — இளம்பூரணம்

(CBCS 2018–19 Academic Year onwards)

Time : Three Hours Maximum : 75 Marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. ஆய்த எழுத்து வரும் முறை யாது?

2. ‘உட்பெறு புள்ளி உருவா கும்மே’ — விளக்குக.

3. உடம்படுமெய் குறித்துத் தொல்காப்பியர் கூறுவது யாது?

4. ‘அத்து’ சாரியை குறித்து நீவிர் அறிவன யாவை?

5. உப்பகாரம், உச்சகாரம் — விளக்கம் தருக.

6. ‘ஏனை வகரம் இன்னொரு சிவணும்’ — சான்றுடன் விளக்குக.

7. நிலா என்னும் சொல் வருமொழியுடன் புணருமாற்றைக் குறிப்பிடுக.

8. ‘வேணவா’ — புணர்ச்சி குறித்து எழுதுக.

9. ‘வெரிந்’ என்னும் சொல், வருமொழியுடன் எவ்வாறு புணரும்?

10. ‘மரப்பெயர்க் கிளவிக்கு அம்மே சாரியை’ — விளக்குக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

11. (அ) உடனிலை மெய்ம்மயக்கம், வேற்றுநிலை மெய்ம்மயக்கம் – சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) மொழிமுதற்போலி, மொழியிடைப் போலி ஆகியன குறித்து எடுத்துரைக்க.

12. (அ) எழுத்துகளின் பொதுப்பிறப்பு குறித்துத் தொல்காப்பியர் உரைப்பன யாவை?

(அல்லது)

(ஆ) எழுத்துச் சாரியை குறித்து விவரிக்க.

13. (அ) யாவர், யாது ஆகிய சொற்களின் மரூஉ குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) ‘உடைமையும் இன்மையும் ஒடுவயின் ஒக்கும்’ — விளக்கம் தருக.

14. (அ) எல்லாரும், எல்லீரும் என்பன உருபு புணர்ச்சியுள் பெறும் மாற்றங்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) இயல்பாகும் அகர ஈற்றுச் சொற்களாகத் தொல்காப்பியம் எடுத்துரைப்பன யாவை?

15. (அ) தேன், மீன் என்பன வருமொழியுடன் புணருமாற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) ‘தொள்ளாயிரம்’ — புணர்ச்சி விதியை எடுத்துரைக்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்று** வினாக்களுக்கு விடையளி.

16. மொழி இறுதி எழுத்துகள் குறித்துத் தொல்காப்பியர் வழிநின்று எடுத்துரைக்க.

17. உயிரெழுத்துப் பிறப்பு குறித்து விவரிக்க.

18. ஊகார ஈற்றுச் சொற்களின் புணர்ச்சி குறித்துத் தொகுத்தெழுதுக.

19. ழகார ஈற்றுச் சொற்கள் வருமொழியுடன் புணரும் முறை குறித்து விளக்குக.

20. ஒன்று முதலான எண்ணுப் பெயர்களுடன் பத்து, நூறு ஆகியன வருமொழியாகிப் புணரும் முறைகளை எடுத்துரைக்க.

———————

**D–5353**

| Sub. Code |
|---|
| 31914 |

DISTANCE EDUCATION

M.A. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2022.

First Semester

இலக்கியத் திறனாய்வியல்

(CBCS 2018–19 Academic Year onwards)

Time : Three Hours    Maximum : 75 Marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. ஆபர் கிராம்பி குறிக்கும் திறனாய்வின் இருவகைகளைச் சுட்டுக.

2. தமிழில் திறனாய்வு என்ற சொல்லைப் பரவலாக்கியவர் யார்?

3. திறனாய்வின் பயன்கள் இரண்டனைச் சுட்டுக.

4. மதிப்பீட்டு முறை திறனாய்வின் நோக்கத்தைப் புலப்படுத்துக.

5. கற்பனையின் வகைகளைச் சுட்டுக.

6. இல்லன படைப்பது என்றால் என்ன?

7. தொல்காப்பியம் கூறும் எண்வகை மெய்ப்பாடுகளைக் குறிப்பிடுக.

8. மார்க்சிய அடிப்படையில் இலக்கிய ஆய்வை மேற்கொண்ட அறிஞர் யார்?

9. நால்வகைப் பாக்களுக்குரிய ஓசைகளைச் சுட்டுக.

10. தொல்படிமவியல் ஆய்வின் முன்னோடி யார்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

11. (அ) திறனாய்வின் நோக்கங்களை விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) இலக்கியக் கல்விக்குத் திறனாய்வின் தேவையை விளக்குக.

12. (அ) மதிப்பீட்டு முறைத் திறனாய்வின் பண்புகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) பாராட்டு முறை திறனாய்வின் பயன்கள் யாவை?

13. (அ) உலகியற் கற்பனை குறித்தெழுதுக.

(அல்லது)

(ஆ) அல் இயற்கைக் கற்பனை என்பது குறித்தெழுதுக.

14. (அ) தொல்காப்பிய மெய்ப்பாட்டியலின் இன்றியமையாமையை விளக்குக.

(அல்லது)

(ஆ) உணர்ச்சிக்கேற்ற வடிவம் — என்பதை விளக்குக.

15. (அ) உளவியல் ஆய்வில் சிக்மண்ட் பிராய்டின் பங்கினை ஆராய்க.

(அல்லது)

(ஆ) புனைவியல் கோட்பாடு தோற்றம் பெற்ற சூழலை விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்று** வினாக்களுக்கு விடையளிக்க.

16. திறனாய்வாளரின் தகுதிகள் குறித்துக் கட்டுரைக்க.

17. ஒப்பீட்டு முறை திறனாய்வு குறித்துக் கட்டுரை வரைக.

18. இலக்கிய உருவாக்கத்திற்கு உணர்ச்சியின் தேவையை அறிஞர் கருத்துக்களுடன் விளக்குக.

19. சமூகவியலும் இலக்கியமும் குறித்து விளக்குக.

20. உருத்தோற்றவியல் ஆய்வு குறித்து விளக்கியெழுதுக.

———————

| D–5354 |
|---|

| Sub. Code |
|---|
| 31921 |

DISTANCE EDUCATION

M.A. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2022.

Second Semester

இலக்கணம் 2 — தொல்காப்பியம் — சொல்லதிகாரம் — சேனாவரையம்

(CBCS 2018–19 Academic Year onwards)

Time : Three Hours　　　　Maximum : 75 Marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளி.

1. பலவின்பால் ஈறுகள் யாவை?

2. வண்ணச்சினைச் சொல்லாவது யாது?

3. தற்கிழமை குறித்து எழுதுக.

4. உருபுமயக்கமாவது யாது?

5. அளபெடைப்பெயர் எவ்வாறு விளியேற்கும்?

6. 'ஒருவர்' என்னும் கிளவி குறித்து எழுதுக.

7. 'இடைப்பிறவரல்' என்பது யாது?

8. ஓகார இடைச்சொல் தரும் பொருள்கள் யாவை?

9. ஐ, வை — உரிச்சொற்களின் பொருள்களைச் சுட்டுக.

10. அவையல்கிளவி குறித்து எழுதுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடையளி.

11. (அ) தகுதியும் வழக்கும் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) ஒரு பெயர்ப் பொதுச்சொல் குறித்து எழுதுக.

12. (அ) நான்காம் வேற்றுமை உருபும் பொருளும் பற்றிக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) நோக்கு அல் நோக்கம் குறித்து விளக்குக.

13. (அ) உயர்திணைப் பெயர்கள் விளி ஏலாமை குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பெண்மை சுட்டிய விரவுப் பெயர்களை விளக்குக.

14. (அ) உயர்திணைக் குறிப்பு வினைமுற்றுகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) முன்னிலை ஒருமை வினைமுற்றுகள் யாவை?

15. (அ) எண்ணிடைச் சொற்கள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) உரிச்சொல்லின் பொது இலக்கணத்தை எடுத்துரைக்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்று** வினாக்களுக்கு விரிவான விடையளிக்க.

16. செப்பு, வினா குறித்து கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

17. இரண்டாம் வேற்றுமையை விளக்கி வரைக.

18. உயர்திணைப் பெயர்கள் குறித்துக் கட்டுரைக்க.

19. பெயரெச்சம், வினையெச்சம் குறித்த செய்திகளை விவரிக்க.

20. தொகைமொழி நிலைகளை எடுத்துரைக்க.

| D–5355 |
|---|

| Sub. Code |
|---|
| 31922 |

DISTANCE EDUCATION

M.A. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2022.

Second Semester

தமிழர் பண்பாடும் கலையும்

(CBCS 2018–19 Academic Year onwards)

Time : Three Hours                Maximum : 75 Marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

பின்வரும் **அனைத்து** வினாக்களுக்கும் விடையளி.

1. தமிழகத்தில் நிலவிய சமயநெறிகளையும் அவற்றின் தலைமைக் கடவுளர்களையும் பட்டியலிடுக.

2. அழகுக்கலைகள் என எவற்றைக் குறிப்பிடுவோம்? ஏன்?

3. சிலப்பதிகாரத்தின் வழி அறியலாகும் கூத்துகள் யாவை?

4. ‘பல்லவர்கால இசை’ — குறிப்பு வரைக.

5. நாடக நாட்டியம் எவ்வாறு அமையும்?

6. கோயில் கட்டடங்கள் கட்டப் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் யாவை?

7. மாமல்லபுரக் கடற்கரைக் கோயிலின் இறைவன் பெயர், வடிவம் இரண்டையும் குறிப்பிடுக.

8. புனையா ஓவியம் எவ்வாறமையும்?

9. 'குடைவரைக் கோவில்' — குறிப்பு வரைக.

10. காஞ்சி கைலாசநாதர் கோயிலின் சிறப்புகளை எழுதுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடை தருக.

11. (அ) தமிழர் பண்பாட்டில் சைவநெறித் தாக்கம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) தமிழர் பண்பாட்டில் வைணவநெறிகள் பற்றி விளக்குக.

12. (அ) தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள இசை பற்றிய செய்திகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) மராட்டியப் பண்பாட்டில் கலைகளுக்கான இடத்தை விவரிக்க.

13. (அ) மகேந்திரவர்ம பல்லவனின் கலைப்படைப்புகள் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) சோழர்களில் நாடகக்கலை வளர்த்தவர் யார்? அவரின் அப்பணியை விவரி.

14. (அ) ஆடுகளம் அமைப்பு, பயன் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) விசயநகரத்தார் கால ஓவியங்களின் சிறப்பை விளக்குக.

15. (அ) ஆழ்வார்களின் பாசுரங்கள் வழிஅறியலாகும் வைணவக் கூறுகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) நால்வகைச் சிற்பங்கள் குறித்து விவரிக்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

**ஏதேனும் மூன்று** வினாக்களுக்கு விரிவான விடையளிக்க.

16. தமிழர் அழகுக்கலைகளும் பண்பாடும் இணையுமிடங்களைத் தொகுத்தெழுதுக.

17. தமிழ்க்காப்பியங்களில் இடம்பெற்றுள்ள பாணர், கூத்தர், விறலி, பொருநர் ஆகியோர்தம் கலைப்பண்பாட்டை விவரிக்க.

18. இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாடகங்கள் ஏற்படுத்திய பண்பாட்டு மாற்றங்களை விரிவாக விளக்குக.

19. தமிழரும் ஓவியரும் என்ற தலைப்பில் கட்டுரை வரைக.

20. தமிழ் மன்னர்களை ஆண்டு வரிசையில் எழுதி அவர்தம் சிற்பக்கலை ஈடுபாட்டை விரித்துரைக்க.

———————

| D–5356 |
|---|

| Sub. Code |
|---|
| 31923 |

DISTANCE EDUCATION

M.A. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2022.

Second Semester

திறனாய்வுக் கோட்பாடு

(CBCS 2018–19 Academic Year onwards)

Time : Three Hours Maximum : 75 Marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. ஆபர்குரோம்பி குறிப்பிடும் இருவகைத் திறனாய்வு முறைகள் யாவை?

2. படைப்பிலக்கியம், திறனாய்வு இவற்றுக்கான வேற்றுமை யாது?

3. தமிழில் இலக்கிய வரலாறு நூலுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் யார்?

4. புதுத் திறனாய்வாளர்கள் 'அனுபவ மாயை' என எதைக் குறிப்பிடுகின்றனர்?

5. இலக்கியம் என்பது சமுதாயத்தின் புலப்பாடு என்று கூறிய பிரெஞ்ச் அறிஞர் யார்?

6. தமிழில் இலக்கிய வரலாறு எழுதியோர் நால்வரைக் குறிப்பிடுக.

7. உளப்பகுப்புமுறை திறனாய்வு முறைக்கு வித்திட்டவர் யார்?

8. ஒரு பனுவலின் மீது எழுதப்பட்ட வேறு பனுவல்களை எவ்வாறு அழைப்பர்?

9. மொழியமைப்புக்குச் சசூரின் இரு கருத்தாக்கங்கள் எவையெவை?

10. லக்கானின் அமைப்பியல் கோட்பாடு பற்றி விவரிக்க.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

11. (அ) திறனாய்வின் பயன்களை விவரிக்க.

(அல்லது)

(ஆ) படைப்புவழித் திறனாய்வு முறை குறித்து எழுதுக.

12. (அ) மொழியியல் திறனாய்வினை விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) சமுதாயச் சித்தரிப்பில் படைப்பாளருக்குள்ள தொடர்பினை விவரிக்க.

13. (அ) இயங்கியல் பொருள் முதல்வாதத்தின் சிறப்பியல்புகள் யாவை?

(அல்லது)

(ஆ) சசூரின் அமைப்பியல் ஆய்வு முறையினை விளக்கியுரைக்க.

14. (அ) எட்டுத்தொகையின் பொது அமைப்பியலைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) நவீனத்துவம் முன்வைக்கும் கருத்துகளைத் தொகுத்துரைக்க.

15. (அ) பின்னைக் காலனித்துவத்தில் பண்பாட்டு நெருக்கடி பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) புலம்பெயர் படைப்புகளின் உள்ளடக்கம் குறித்து எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்றனுக்கு** மட்டும் விடை தருக.

16. தற்காலத் திறனாய்வு வளர்ச்சியும் செல்நெறிகளும் குறித்து மதிப்பிடுக.

17. இலக்கியத்தின் வரலாறு காணும் முறையினை விவரிக்க.

18. தமிழ் இலக்கியத்தில் பெண்ணியக் கூறுகள் இடம்பெற்றிருத்தலை எடுத்துரைக்க.

19. அமைப்பியலின் அடிப்படைக் கூறுகளை விரித்துரைக்க.

20. எடுத்துரைப்பியல் நோக்கில் புதினங்களை அணுகும் முறையினை விவரிக்க.

———————

| D–5357 |
|---|

| Sub. Code |
|---|
| 31924 |

DISTANCE EDUCATION

M.A. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2022.

Second Semester

கல்வெட்டியல்

(CBCS 2018–19 Academic Year onwards)

Time : Three Hours Maximum : 75 Marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளி.

1. கல்வெட்டு படியெடுக்கும் மை எப்பொருள்களிலிருந்து தயாரிக்கப்பட்டது?

2. பிராமி எழுத்தின் இருவகைகள் யாவை?

3. வடமொழிக் கல்வெட்டு வகைகளைச் சுட்டுக.

4. பிரகஸ்தி, ஸ்வஸ்திஸ்ரீ — விளக்குக.

5. பொன்னின் அளவைக் குறிக்கும் சொற்கள் யாவை?

6. தென்னிந்தியக் கல்வெட்டு அறிஞர்களுள் சிலர் பெயரைக் குறிப்பிடுக.

7. ஹரப்பா, மொகஞ்சதாரோ — ஆய்வாளர் யாவர்?

8. வட்டெழுத்து காணப்பெறும் இடங்கள் யாவை?

9. கல்வெட்டுகளில் காணலாகும் ஆண்டு முறைகளைக் குறிப்பிடுக.

10. கரோஷ்டி எழுத்து குறித்து நீவிர் அறிவன யாவை?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடையளி.

11. (அ) அசோகர் கல்வெட்டு உணர்த்தும் செய்திகள் யாவை?

(அல்லது)

(ஆ) காலந்தோறுமான பேராட்சி, ஊராட்சி செயல்பாடுகள் குறித்து எழுதுக.

12. (அ) சங்ககாலச் சேரர் கல்வெட்டு குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) புலிமான் கோம்பை நடுகற்கள் குறித்து விளக்குக.

13. (அ) கல்வெட்டுகளின் நோக்கமும் பயனும் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பாண்டியரின் மெய்க்கீர்த்தி குறித்து விளக்குக.

14. (அ) வட்டெழுத்து, கிரந்தஎழுத்து — விளக்குக.

(அல்லது)

(ஆ) பழங்காலத் தேர்தல் முறை குறித்து விவரிக்க.

15. (அ) அழகர்மலைக் கல்வெட்டு குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) கொடுமணல் குறியீடுகளை விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்று** வினாக்களுக்கு விரிவான விடையளி.

16. செப்பேடுகள் குறித்து விவரி.

17. தமிழ்எழுத்துகளின் தோற்றம் குறித்து எடுத்துரைக்க.

18. காலந்தோறுமான வரிகள் குறித்து எழுதுக.

19. பிராமி எழுத்து குறித்து விவரி.

20. இந்தியக் கல்வெட்டுகளில் காணும் மொழிகள் நிலை குறித்து விவரி.

| D–5358 |
|---|

| Sub. Code |
|---|
| 31931 |

DISTANCE EDUCATION

M.A. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2022.

Third Semester

சங்க இலக்கியங்கள்

(CBCS 2018–19 Academic Year onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளி.

1. அகமரபிற்குக் குறிஞ்சிப்பாட்டு எவ்வாறு சான்றாகிறது?

2. ஏறுதழுவுதல் என்றால் என்ன?

3. மருதத்திணைப் பாடல்களின் பொதுக்கூறு யாது?

4. இரங்கல் உரிப்பொருள் நெய்தலில் எவ்வாறு அமையும்?

5. பாலைநில வெம்மைக்குக் குறுந்தொகைவழி சான்று காட்டு.

6. வரைவுகடாதல் என்றால் என்ன?

7. வன்புறை எதிரழித்து மொழிதல் என்பது யாது?

8. தைந்நீராடல் — குறிப்பு வரைக.

9. வல்வில் ஓரியைப் பரணர் எவ்வாறு பாடுகிறார்?

10. செந்துறைப் பாடாண்பாட்டு — குறிப்பு வரைக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடை தருக.

11. (அ) குறிஞ்சிப்பாட்டில் வெளிப்படும் களவுமணமுறையை விளக்கு.

(அல்லது)

(ஆ) குரவைக்கூத்து என்றால் என்ன?

12. (அ) தலைவன் ஏறுதழுவிய திறத்தைத் தோழி தலைவிக்கு எவ்வாறு உரைக்கிறாள்?

(அல்லது)

(ஆ) உள்ளுறைக்கு ஐங்குறுநூற்றுப் பாடலைச் சான்று காட்டுக.

13. (அ) நெய்தல்திணையின் அமைப்பு யாது?

(அல்லது)

(ஆ) பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைவி கூறியதை நற்றிணைவழி விளக்கு.

14. (அ) வையைப் பெருவெள்ளக் காட்சியைப் பரிபாடல் எடுத்துரைக்கும் திறம் யாது?

(அல்லது)

(ஆ) செவியறிவுறூஉ என்றால் என்ன? சான்று காட்டுக.

15. (அ) விறலியாற்றுப்படை என்பதை விளக்குக.

(அல்லது)

(ஆ) புறநானூறு கூறும் வாழ்வியல் அறங்கள் எவை?

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்று** வினாக்களுக்கு மட்டும் விரிவாக விடையளிக்க.

16. கைக்கிளைப் பொருண்மையில் அமைந்த முல்லைக் கலிப்பாடல்களில் இடம்பெறும் கருத்துக்களை விவரிக்க.

17. தலைவியின் பிரிவுத் துயரைக் குறுந்தொகைப் பாலைப் பாடல்கள் வெளிப்படுத்தும் முறையை எடுத்துரைக்க.

18. பாடாண்திணைப் பாடல்களின் செய்திகளை விளக்குக.

19. பதிற்றுப்பத்தில் இடம்பெறும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

20. சிறுபாணாற்றுப்படை உணர்த்தும் பாணர் வாழ்வியலை விவரிக்க.

| D–5359 |
|---|

| Sub. Code |
|---|
| 31932 |

DISTANCE EDUCATION

M.A. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2022.

Third Semester

காப்பியங்கள்

(CBCS 2018–19 Academic Year onwards)

Time : Three Hours Maximum : 75 Marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளி.

1. மாதவிக்கு அரசன் தந்த பரிசில் யாது?

2. இந்திரவிழாவில் நடைபெற்ற நிகழ்வுகளை வரிசைப்படுத்துக.

3. மணிமேகலை பற்றிய அலர் யாது?

4. மணிமேகலைக்குப் பாத்திரம் நல்கியது யார்? அதன் சிறப்பு யாது?

5. கண்ணப்ப நாயனாரின் ஊர் எது? அவர் இறைவனுக்குத் தந்தது யாது?

6. வீமனோடு பொருத மன்னன் யார்? எந்நகரத்தரசன்?

7. தேம்பாவணி — நூற்குறிப்பு தருக.

8. அம்புக்கூடம் அமைத்தது யார்? எதற்காக?

9. சீறாப்புராணக் காண்டங்கள் யாவை?

10. தமயந்தியின் பெற்றோர் யாவர்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடை தருக.

11. (அ) மாலை நேரத்தின் இயல்புகளை சிலப்பதிகாரம் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) மாதவியின் பதினோர் ஆடல் பற்றி எழுதுக.

12. (அ) கவுந்தியுடன் கோவலன் சென்ற வழியின் இயல்புகளைக் கூறுக.

(அல்லது)

(ஆ) பளிக்கறையின் தன்மைகளை விவரிக்க.

13. (அ) கோவிந்தையாரின் அழகுநலத்தை விவரிக்க.

(அல்லது)

(ஆ) கண்ணபிரானைத் தருமன் பாராட்டியது எங்ஙனம்?

14. (அ) சூசையின் பண்புகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) தருமனும் வேதவியாசரும் யாது பற்றி உரையாடினர்? விளக்குக.

15. (அ) காளையின் இயல்புகளாகச் சீறாப்புராணம் கூறுவன யாவை?

(அல்லது)

(ஆ) மக்கட்பேறு குறித்து வளையாபதி கூறுவன யாவை?

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்றுக்கு** மட்டும் விரிவான விடை தருக.

16. கோவலனும், கண்ணகியும் இல்லறமேற்ற பாங்கை விவரிக்க.

17. மணிமேகலா தெய்வம் தோன்றியமையை விரித்துரைக்க.

18. சீவகனின் போர்த்திறத்தை விளக்கி வரைக.

19. துச்சாதனன் அழிவை கன்ன பருவம் வழிநின்று விளக்குக.

20. உமறு கத்தாபு ஈமான் கொண்டது எங்ஙனம்? விவரிக்க.

———————

| D–5360 |
|---|

| Sub. Code |
|---|
| 31933 |

DISTANCE EDUCATION

M.A. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2022.

Third Semester

சிற்றிலக்கியங்கள்

(CBCS 2018–19 Academic Year onwards)

Time : Three Hours Maximum : 75 Marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளி.

1. பரணி — பெயர்க்காரணம் தருக.

2. காலன் இடும் தூண்டில் போன்றது எது?

3. குலோத்துங்க சோழன் உலா —யாப்பு குறித்து எழுதுக.

4. பல்லவர்கோன் சேவடிக்கீழ்க் காணத்தக்கன எவை?

5. பிறவேந்தர் வீரம் எதுவரை எனக் கலம்பகம் குறிப்பிடுகின்றது?

6. தலைவி வண்டைத் தூதனுப்பாமைக்கு உரிய காரணம் யாது?

7. தேனடுவித்திரை எழும்பும் காட்சியைச் சுட்டுக.

8. அம்புலிப் பருவம் குறித்து எழுதுக.

9. தஞ்சைவாணன் குறித்து நீவிர் அறிவன யாவை?

10. குற்றமும் தண்டனையும் இடம் மாறியதாக முத்தொள்ளாயிரம் கூறுவதை விளக்குக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடை தருக.

11. (அ) செயங்கொண்டார் காட்டும் தாவரங்களின் வறட்சி நிலையைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) குலோத்துங்கசோழன் உலாவில் இடம்பெறும் பெதும்பையின் இயல்புகளைக் குறிப்பிடுக.

12. (அ) 'ஓலை விடேல் விடுகே' — விளக்குக.

(அல்லது)

(ஆ) நந்திவர்மனிடம் இரவலர் கவர்வன யாவை?

13. (அ) தமிழ்மொழி அரசு வீற்றிருத்தல் குறித்த தூதுநூல் கருத்துகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) தமிழ்விடுதூது, தமிழைப் பயிராக உருவகிக்கும் பாங்கினைப் புலப்படுத்துக.

14. (அ) திருக்குற்றால நாதரின் கிளைவளம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் இடம்பெறும் மதுரையின் பெருமைகளைக் குறிப்பிடுக.

15. (அ) சுனைவியந்துரைத்தல் துறைப்பாடற்கருத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) சோழனது யானையின் ஆற்றலைக் குறித்து முத்தொள்ளாயிரம் குறிப்பிடுவதை விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு** மட்டும் விரிவாக விடையளிக்கவும்.

16. 'பரணிக்கோர் செயங்கொண்டான்' என்னும் கூற்றை நிறுவுக.

17. நந்திக்கலம்பகத்தில் இடம்பெறும் அகப்பொருள் செய்திகளை விளக்குக.

18. திருக்குற்றாலத் தலச்சிறப்பை எடுத்துரைக்க.

19. மீனாட்சியுடன் விளையாடவரின் அம்புலி எய்தும் பயன்களாகக் குமரகுருபரர் உரைப்பனவற்றை விளக்குக.

20. தஞ்சைவாணன் கோவையில் கூறும் குறையுற உணர்தல் பகுதிக் கருத்துகளை விவரிக்க.

---

| D–5361 |
|---|

| Sub. Code |
|---|
| 31934 |

DISTANCE EDUCATION

M.A. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2022.

Third Semester

இலக்கணம் 3 — தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணம்

(CBCS 2018–19 Academic Year onwards)

Time : Three Hours                                        Maximum : 75 Marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. அகத்திணைப் பாடல்களில் அமைந்த முப்பொருள்கள் யாவை?

2. "சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறார்" — நூற்பா சுட்டும் திணைகள் எவையெவை?

3. வஞ்சித்திணை எத்திணைக்குப் புறனாய் அமைந்தது?

4. "ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப" — எச்சிற்றிலக்கியத்திற்கு வித்திட்டது?

5. தமிழரின் களவு மணம் ஆரியரின் எத்திருமண முறையினை ஒத்தது?

6. காட்டலாகப் பொருள் நான்கினைக் குறிப்பிடுக.

7. மெய்ப்பாடு எத்தனை வகைப்படும்?

8. உவமைக்குரிய நிலைக்களன்கள் யாவை?

9. தொல்காப்பியம் சுட்டும் ‘பிசி’ தற்காலத்தில் எவ்வாறு சுட்டப்படுகிறது?

10. ‘குருளை’ என்னும் இளமைப் பெயரினை எவ்வெவ்விலங்குகள் பெறும்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

11. (அ) அறுவகைப் பருவம், பொழுது ஐந்திணைக்கு உரியவாறு யாங்ஙனம் விளக்குக.

(அல்லது)

(ஆ) கைக்கிளை, பெருந்திணை குறித்து விளக்கி வரைக.

12. (அ) “மறையோர் தேஎத்து மன்றல் எட்டு” — எவையெவை விளக்குக.

(அல்லது)

(ஆ) அறத்தொடு நிற்றல் பற்றிய தொல்காப்பியர் கருத்தினைத் தருக.

13. (அ) தும்பைத்திணையின் சிறப்பியல்புகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) மெய்யுறு புணர்ச்சிக்குரிய பத்து அவத்தைகள் யாவை? விளக்குக.

14. (அ) பொருளியல் சுட்டும் உள்ளுறை, இறைச்சி இலக்கணங்களைத் தருக.

(அல்லது)

(ஆ) உவமப் போலியின் வகைகளை விளக்குக.

15. (அ) தொல்காப்பியர் குறிப்பிடும் அசைவகைகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) எண்வகை வனப்புகள் யாவை? விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்றனுக்கு** மட்டும் விடை தருக.

16. தலைமகனுக்குக் கூற்று நிகழுமிடங்களாக அகத்திணையியல் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

17. வெட்சித்திணையின் திணை, துறைகளை விவரிக்க.

18. "பேராச்சிறப்பின் இருநான்கு கிளவியும்" — இருநான்கு கிளவிகள் யாவை? விரித்துரைக்க.

19. மெய்ப்பாடுகள் எத்தனை வகைப்படும்? விளக்குக.

20. தொல்காப்பியர் சுட்டும் இளமைப் பெயர்கள் குறித்து விளக்கியுரைக்க.

| D–5362 |
|---|

| Sub. Code |
|---|
| 31941 |

DISTANCE EDUCATION

M.A. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2022.

Fourth Semester

ஒப்பிலக்கியம்

(CBCS 2018–19 Academic Year onwards)

Time : Three Hours　　　　Maximum : 75 Marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. ஒப்பீட்டு இலக்கியம் — இதன் ஆங்கிலச் சொல் யாது? அதனை யார்? எப்போது கையாண்டார்?

2. தமிழில் ஒப்பிலக்கிய ஆய்வு வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள் யாவர்?

3. தமிழனின் உலகப்பார்வைக்கு இரு சான்றுகள் தருக.

4. ஒப்பிலக்கியம் ஏன் இன்றியமையாதது?

5. இணைநிலை என்றால் என்ன? அதன் வேறுபெயர்கள் யாவை?

6. ஒப்பிலக்கியம் குறித்த அமெரிக்கக் கோட்பாடு யாது?

7. உலகில் இல்லாத புதுமைகளைக் கற்பனையாய் எழுதப்பட்ட தமிழிலக்கியங்களில் நான்கினைச் சுட்டுக.

8. மெய்ப்பாடு — குறிப்பு வரைக.

9. வீரநிலைப் பாடல்களை வரையறுத்தவர் யார்? எங்ஙனம்?

10. பாரதியோடு ஒப்புநோக்கத்தக்க மேனாட்டுப் படைப்பாளர் யார்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளி.

11. (அ) ஒப்பிலக்கிய வளர்ச்சியில் இதழ்களின் பங்கு குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) தமிழக ஒப்பிலக்கிய அறிஞர்களின் பணிகள் யாவை?

12. (அ) தேசிய இலக்கியம் என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) ஜெர்மனியில் ஒப்பிலக்கிய வளர்ச்சி பற்றி எழுதுக.

13. (அ) 'தாக்கக் கோட்பாடு ஒப்பிலக்கியத் துறையின் படி' — நிரூபிக்க.

(அல்லது)

(ஆ) அடிக்கருத்தியல் கோட்பாடு ஒப்பிலக்கிய வளர்ச்சிக்கும் பயன்படும் விதத்தைத் தொகுக்க.

14. (அ) இலக்கியமும் ஓவியமும் இணையுமாற்றை விவரிக்க.

(அல்லது)

(ஆ) இலக்கியமும், சிற்பமும் இணையுமாற்றை விவரிக்க.

15. (அ) ஒப்பிலக்கியத்தில் உளவியலின் பங்கும் பணியும் யாது? விளக்குக.

(அல்லது)

(ஆ) சார்பியல் கோட்பாடுகளை விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்றுக்கு** விரிவான விடை தருக.

16. தமிழக ஒப்பிலக்கிய வரலாறு குறித்து கட்டுரை எழுதுக.

17. "ஒப்பிலக்கியக் கோட்பாடுகள் உலகளாவிய இலக்கிய மறுமலர்ச்சிக்குச் சான்றாகும்" — இக்கூற்றை நிரூபிக்க.

18. 'ஒப்பிலக்கியமும் மொழிபெயர்ப்பும்' — இத்தலைப்பில் கட்டுரை வரைக.

19. இலக்கியங்களோடு பிறகலைகளின் தொடர்பைத் தொகுத்தெழுதுக.

20. இலக்கியம் அறிவுசார்ந்த கலை என்பதைச் சான்றுகள் தந்து விளக்குக.

———————

| D–5363 |
|---|

| Sub. Code |
|---|
| 31942 |

DISTANCE EDUCATION

M.A. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2022.

Fourth Semester

பண்பாட்டு மானிடவியல்

(CBCS 2018–19 Academic Year onwards)

Time : Three Hours    Maximum : 75 Marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. பண்டைய கிரேக்க இலக்கியங்கள் பெரும்செல்வாக்குப் பெற மூலகாரணமாகத் திகழ்ந்தவர் யார்?

2. பிளேட்டோ எம்மாதிரிச் சமுதாயம் அமையவேண்டுமென விரும்பினார்?

3. உயரம் மிகுந்த மலைப்பகுதிகளில் வாழ்வோர் வேகமாக மூச்சிழுக்கக் காரணம் என்ன?

4. மானிடவியலின் நால்வகைப் பிரிவுகளை எழுதுக.

5. அமைப்பியல் மொழியியல் (structural linguistics) என்றால் என்ன?

6. பண்பாட்டு உட்கூறுகளின் தன்மைகளைக் கூறுக.

7. பெனிடிக்ட் விளக்கும் “அமைதிப் பண்பாடு” குறித்து எழுதுக.

8. சாதிக் கொள்கைகளில் 'மரபுக் கொள்கை' பெறுமிடம் யாது?

9. இன ஒதுக்கல் கொள்கை என்றால் என்ன?

10. சாதிமுறையின் வகைகளை எழுதுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

11. (அ) மானிடவியல் வளர்ச்சியில் 'புத்தாய்வுக்காலம்' பெறுமிடத்தைச் சுட்டுக.

(அல்லது)

(ஆ) அறிவொளிக்கால மானிடவியல் சிந்தனைகளை எழுதுக.

12. (அ) உடல்சார் மானிடவியல் பற்றிக் கூறுக.

(அல்லது)

(ஆ) மானிட உடல் அளவையியலின் போக்கு குறித்து எடுத்துரைக்க.

13. (அ) பொருள்சார் பண்பாடும் பொருள்சாராப் பண்பாடும் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) உட்பண்பாடு (subculture) பற்றிக் கூறுக.

14. (அ) தமிழகப் பழங்குடியினரின் பண்பாட்டு மாற்றம் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) சாதிமுறையின் தோற்றத்திற்குத் தொழிற்கொள்கை காரணமாக அமைந்துள்ளதா? ஆய்ந்துரைக்க.

15. (அ) உகந்த நிலைப்பண்பாடும் உண்மைப் பண்பாடும் குறித்தெழுதுக.

(அல்லது)

(ஆ) சாதி முறை குறித்த அரசியல் கொள்கையியலாரின் சிந்தனைகளைப் புலப்படுத்துக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு** விடையளிக்கவும்.

16. மானிடவியலின் தோற்றம் பற்றி விவரிக்க.

17. மானிடவியல் ஆராய்ச்சியில் களப்பணி பெறுமிடத்தை மதிப்பிடுக.

18. பண்பாட்டின் உட்கூறுகளை விவரிக்க.

19. 'பண்பாடு ஒரு நடத்தைசார்முறை' என்பார் கூற்றை நிறுவுக.

20. சாதி பற்றிய நவீனக் கோட்பாடுகளை விவரிக்க.

---

| D–5364 |
|---|

| Sub. Code |
|---|
| 31943 |

DISTANCE EDUCATION

M.A. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2022.

Fourth Semester

தமிழக வரலாறும் பண்பாடும்

(CBCS 2018–19 Academic Year onwards)

Time : Three Hours Maximum : 75 Marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. சங்கங்கள் இருந்தன என்பதற்குரிய ஆதாரங்களில் இரண்டினைக் குறிப்பிடுக.

2. இரும்புக்காலம் பற்றிக் குறிப்பு வரைக.

3. சேரமான் கணைக்கால் இரும்பொறை குறித்து எழுதுக.

4. பாண்டியன் உக்கிரப்பெருவழுதி பற்றிக் கூறுக.

5. திருமலை நாயக்கர் செய்த உள்நாட்டுச் சீர்திருத்தங்களை விளக்குக.

6. சுயமரியாதை இயக்கம் பற்றிக் கூறுக.

7. சித்தன்னவாசல் ஓவியச் சிறப்பினை எடுத்துரைக்க.

8. நாகரிகம், பண்பாடு விளக்குக.

9. மாமல்லபுரச் சிற்பங்கள் பற்றிக் கூறுக.

10. தமிழகத்தில் ஆற்றங்கரை நாகரிகங்கள் தோன்றிய இடங்களை எழுதுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

11. (அ) தமிழகத்தின் இயற்கை அமைப்பினைச் சுட்டுக.

(அல்லது)

(ஆ) சங்ககாலச் சேர மன்னர்களைப் பற்றிய செய்திகளைக் கூறுக.

12. (அ) பல்லவ மன்னர்களின் தோற்றம் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) சோழர்களின் ஆட்சிமுறையினை எழுதுக.

13. (அ) நாயக்கர் வரலாற்றில் இராணி மங்கம்மாள் பெறுமிடத்தைக் கூறுக.

(அல்லது)

(ஆ) வேலூர்க்கலகத்திற்குரிய காரணங்கள், போக்குகள், விளைவுகள் குறித்து எழுதுக.

14. (அ) பௌத்தம் வளர்த்த தமிழ் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழர்களின் அறவாழ்வியலைப் புலப்படுத்துக.

15. (அ) ஆங்கிலேயர் ஆட்சியில் தமிழகத்தின் கல்வி நிலை குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) விடுதலைக்குப் பிந்தைய தமிழக வரலாற்றில் ‘நீதிக்கட்சி’யின் பங்களிப்பினைக் கூறுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு** விடையளிக்கவும்.

16. தமிழக வரலாற்றை அறிய உதவும் சான்றுகளை விவரிக்க.

17. களப்பிரர் வரலாற்றினை ஆயந்துரைக்க.

18. இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்களிப்பினை விவரிக்க.

19. தமிழக மருத்துவக்கலையின் சிறப்பினை எடுத்துரைக்க.

20. தமிழ்ப்பண்பாட்டில் சமணம் பெறுமிடத்தை மதிப்பிடுக.

———————

| D–5365 |
|---|

| Sub. Code |
|---|
| 31944 |

DISTANCE EDUCATION

M.A. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2022.

Fourth Semester

ஆராய்ச்சி அறிமுகம்

(CBCS 2018–19 Academic Year onwards)

Time : Three Hours Maximum : 75 Marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. ஆராய்ச்சி — சொல் விளக்கம் தருக.

2. சோதனைமுறை ஆய்வில் குறிக்கத்தக்க பண்புகள் யாவை?

3. ஆராய்ச்சி நெறிமுறைகள் என்னும் நூலினை எழுதியவர்களுள் இருவர் பெயரைக் குறிப்பிடுக.

4. ஆய்வாளனுக்கு வேண்டிய தகுதிகள் இரண்டினைக் குறிப்பிடுக.

5. ஆய்வுச் சிக்கலுக்குரிய மூவகை வினாக்கள் யாவை?

6. வினாநிரலின் வகைகள் இரண்டினைச் சுட்டுக.

7. அடிக்குறிப்பில் ‘மேலது’ என்பது எதைக் குறிக்கிறது?

8. சுருக்கக் குறியீட்டு விளக்கம் ஆய்வேட்டின் எப்பகுதியில் இடம்பெறும்?

9. ஆய்வேட்டின் கட்டமைப்பு எத்தனை வகைகளாகப் பாகுபடுத்தப்படுகிறது?

10. மேற்கோள் என்றால் என்ன?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

11. (அ) ஆய்வாளனுக்குரிய பண்புகள் யாவை? விளக்குக.

(அல்லது)

(ஆ) ஆராய்ச்சி — அறிஞர்கள் தரும் விளக்கங்களைத் தொகுத்துரைக்க.

12. (அ) உற்றுநோக்கலின் பயன்பாடு குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) நேர்காணலின் வகைப்பாட்டினைச் சான்றுகளுடன் தருக.

13. (அ) கள ஆய்வு என்றால் என்ன? விவரிக்க.

(அல்லது)

(ஆ) களஆய்வில் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் குறித்து எழுதுக.

14. (அ) ஆய்வேடு எழுதும் முன்பாக ஆய்வாளர் மேற்கோள்ள வேண்டிய நெறிமுறைகள் குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) அடிக்குறிப்பிடுவதன் நோக்கம் யாது? விளக்குக.

15. (அ) ஆய்வேட்டின் இயல் பகுப்பு முறையினை விளக்குக.

(அல்லது)

(ஆ) மேற்கோள்கள் இடும் முறையினைத் தெளிவுறுத்துக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்றனுக்கு** மட்டும் விடையளிக்க.

16. தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி குறித்து மதிப்பிடுக.

17. ஆய்வாளனுக்குரிய தகுதி யாது? விரித்துரைக்க.

18. ஆய்வேட்டின் வகைகளைச் சான்றுகளுடன் தருக.

19. ஆய்வுச் சிக்கலின் தோற்றுவாய்கள் குறித்து விளக்குக.

20. கள ஆய்வுக்குத் தேவையான கருவிகள் குறித்து எழுதுக.

———————